கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No.: NP/03/07/ABAYAM/2023
உமது இல / ඔබේ අංකය / Your No.:
திகதி / දිනය / Date: 27/02/2023

சுற்றுநிருப இலக்கம்:***2023/ 01***

***சகல பாடசாலை அதிபர்களுக்கும் (1AB, 1C, Type II)***
***வடக்கு மாகாணம்.***

**வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் தமது கருத்துக்கள் மற்றும் மன வெளிப்பாடுகளைக் கௌரவ ஆளுநர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்குத் தெரியப்படுத்துவதற்கான சந்தர்ப்பம்.**

பாடசாலைக் கற்றல், கற்பித்தல் என்பது எப்போதும் மாணவர்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையில் நடைபெற வேண்டும். கற்றல் முதலான அனைத்துப் பாடசாலை அனுபவங்களிலும் ஈடுபாடு காட்டத்தக்க வகையிலும் சுறுசுறுப்புத் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் செயற்படும் வகையிலும் மாணவர்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இதன் மூலமாக மாணவர்கள் சரியான கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் நபர்களாக, சிறந்த ஆளுமை மிக்க தலைமைத்துவத்தினை வெளிப்படுத்தும் நபர்களாக மாற்றம்பெற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கௌரவ ஆளுநர் அவர்களின் வழிகாட்டுதலில் மாணவர்களுக்கான தொடர்பு வலையமைப்பு "அபயம்" உருவாக்கப்பட்டுள்ளது.

இளம் மாணவச் சிறார்கள் பாடசாலைக் கல்வி உட்பட, தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அம்சங்களைப் பற்றியும் நன்கு புரிதலோடு கூடிய கருத்துக்களை வைத்திருக்கும் திறன் கொண்டவர்கள். இந்த மாணவர்களின் கண்ணோட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான உணர்வு நிலைகள் மற்றும் விருப்பு வெறுப்புகள் இருக்கவே செய்யும். அவர்களுக்கான உணர்வுகள் விருப்பு வெறுப்புகள் எப்படி அமையவேண்டும் என்பது பற்றிய நுண்ணறிவை வழங்குவதே பாடசாலைக் கல்வியின் அடிப்படை. இதற்கு அமைவாகத் தங்கள் பாடசாலையின் க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தமது சுதந்திரமான கருத்துக்கள் மற்றும் மன வெளிப்பாடுகளைக் கௌரவ ஆளுநர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு, மேற்படி "அபயம்" மாணவர்களுக்கான தொடர்பு வலையமைப்பின் ஊடாகத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

.

1. கல்வி மற்றும் விளையாட்டு வசதிகள்
2. பாடசாலையின் அடிப்படை வசதிகள்
3. உணவு மற்றும் ஊட்டச் சத்து
4. போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு
5. சுகாதாரம் மற்றும் உளநலம்
6. மது மற்றும் போதைப் பொருள் துர்ப்பாவனையைத் தடுத்தல்
7. எதிர்கால இலட்சியங்கள் மற்றும் தொழில் விருப்பங்கள்
8. மாணவர்கள் வாழும் கிராமத்தை / நகரத்தை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள்

இச் செயற்பாட்டினை வினைத்திறனுடன் முன்னெடுக்கும் பொருட்டு, பாடசாலை மட்டத்தில் பின்வரும் அடிப்படை விடயங்களைப் பூரணப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. காலை நேரப் பிரார்த்தனை ஒன்றுகூடலில் இவ்விடயம் தொடர்பில் மாணவர்களுக்குத் தெளிவூட்டி தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களில், தரம் 11 மாணவன் / மாணவியைத் தலைவராகக் கொண்ட, 6 பேர் கொண்ட, மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியினை மாணவர்கள் தாமாகவே சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்க வாய்ப்பினை ஏற்படுத்தல்.
2. தரம் 12, தரம் 13 மாணவர்களில் 6 பேர் கொண்ட, மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியினை மாணவர்கள் தாமாகவே சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்க வகை செய்தல்.
3. இவ் அணியினை மாணவர்கள் தெரிவு செய்யும்போது, ஆண் மாணவர்கள் மற்றும் பெண் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் பால் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதுடன் பாடசாலையில் விசேட தேவையுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களும் கற்பார்களாயின், அவ் அணியில் விசேட தேவையுடைய மாற்றுத் திறனாளி மாணவர் ஒருவரும் அங்கம் வகிப்பதை உறுதிப்படுத்துமாறு மாணவர்களிற்கு ஆலோசனை வழங்கப்படுதல் வேண்டும்
4. 6 பேர் கொண்ட, மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியினர் ஏனைய மாணவர்களது கருத்துக்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதிக்கு முன்னர், தரம் 11 வரையான மாணவர்கள் குழுவிலிருந்து மாணவர்களது கருத்துக்கள் மற்றும் மன வெளிப்பாடுகள் பற்றிய ஒரு அறிக்கையும் உயர்தர மாணவர்கள் குழுவிலிருந்து ஒரு அறிக்கையும் பெற்று செயலாளர் மாகாணக் கல்வி அமைச்சிற்கு மாணவர்களால் வழங்கப்படும் கடிதங்கள் அடங்கிய கடித உறை சீல் செய்யப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.
6. மாகாணக் கல்வி அமைச்சினால் குறிப்பிடப்படும் ஒரு தினத்தில், பாடசாலை மாணவர்கள் சார்பாக, பாடசாலையின் இரு குழுக்களிலிருந்தும் **'அபயம் - 0706666677'** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு, மேலே குறிப்பிடப்பட்ட 8 விடயங்கள் தொடர்பாகவும் எந்தவித அழுத்தமுமின்றி, சுதந்திரமாக மாணவர்கள் கௌரவ ஆளுநர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் நேரடியாகப் பேசிக்கொள்ளுதல் வேண்டும்.
7. **'அபயம் - 0706666677'** என்ற தொலைபேசி இலக்கத்துடன் மாணவர்கள் தொடர்பு கொள்வது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.
8. மாணவர்கள் தெரிவிக்கும் விடயங்கள் காரணமாக, பாடசாலை அதிபராலோ, ஆசிரியர்களாலோ மாணவர்கள் எதுவித அழுத்தத்திற்கும் உள்ளாக்கப்படக்கூடாது என்பதுடன், அதிபர், ஆசிரியர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை மாணவர்கள் மூலமாகத் தெரிவிக்கவும் முற்படக்கூடாது.
9. மாணவர்கள் தமது கருத்துக்கள் மற்றும் மன வெளிப்பாடுகளைத் தெரிவிப்பது தொடர்பில், மாணவர்களுக்கான தொடர்பு வலையமைப்புப் பற்றிய தகவல்கள் அடங்கிய சுவரொட்டியினைத் தங்களது பாடசாலையில் மாணவர்கள் அனைவரும் பார்வையிடக்கூடிய வகையில் காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அ.உமாமகேஸ்வரன்,
**செயலாளர்.**

பிரதிகள் :

1. ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம் -
2. பிரதம செயலாளர் , வடக்கு மாகாணம்
3. மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம் - உரிய நடவடிக்கையின் பொருட்டு
4. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - உரிய நடவடிக்கையின் பொருட்டு
5. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - உரிய நடவடிக்கையின் பொருட்டு